# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 08 | வரலாறு | நேரம்: 2 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி I

➢ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

**01.** இலங்கையின் ஆரம்ப குடியிருப்புகள் உலர் வலயத்தில் அமைத்துக் கொள்ளப்பட்டதன் பிரதான நோக்கம்.
1. விவசாய நடவடிக்கைக்காக  2. கைத்தொழில் நடவடிக்கைக்காக
3. நீர்ப்பாசன நடவடிக்கைக்காக  4. வர்த்தக நடவடிக்கைக்காக

**02.** நீரியல் தொழில்நுட்பமாகக் கருதக்கூடியது.
1. விகாரைகள்  2. தடாகங்கள்  3. அரண்மனைகள்  4. தூபிகள்

**03.** இன்றைய பசவக்குளத்தை உருவாக்கிய மன்னனையும் அதன் புராதன பெயரையும் காட்டும் சரியான விடைத் தொகுதி.
1. பண்டுகாபயன் - ஜெயவாவி  2. தேவநம்பியதிஸ்ஸன் - அபயவாவி
3. பண்டுகாபயன் - அபயவாவி  4. தேவநம்பியதிஸ்ஸன் - ஜெயவாவி

**04.** இலங்கையில் முதன் முதலில் பாரிய குளத்தை உருவாக்கிய மன்னன்.
1. மகாபராக்கிரமபாகு  2. தாதுசேனன்  3. மகாசேனன்  4. வசபன்

**05.** இலங்கையின் நீர்ப்பாசன தெழில்நுட்பவியலாளருக்கே உரித்தான குளத்தின் பகுதியாகக் கருதப்படுவது.
1. கலிங்கல்  2. அலைதாங்கி  3. கலிங்கல் தொட்டி  4. வெளி வான்கதவு

**06.** இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைய ஏதுவாக அமைந்த ஆக்கிரமிப்பு.
1. சோழர்களின் ஆக்கிரமிப்பு  2. ஏழுதமிழர்களின் ஆக்கிரமிப்பு
3. சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு  4. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

**07.** எலஹர கால்வாயின் உருவாக்கத்தின் போது எதிர்கொண்ட சாவாலை வெற்றிகொண்ட முறை பற்றிக் குறிப்பிடும் நூலினையும் எழுதிய நூலாசிரியரையும் சரியாகக் காட்டும் விடைத் தொகுதி.
1. இலங்கையின் புராதன நீர்ப்பாசனம் - புரோஹியர்
2. எதா ஹெல திவ – றொபேட் நொக்ஸ்  3. சமந்தபாஸதிகாவ – புத்தகோசதேரர்
4. இலங்கையின் புராதன நீர்ப்பாசனம் - பாஹியன்தேரர்

**08.** நிலத்தின் சாய்வினைக் கவனத்தில் கொண்டு கலாவாவியில் இருந்து திஸா வாவிக்கு நீரைக் கொண்டு செல்ல அமைக்கப்பட்ட கால்வாய்.
1. பப்பதந்த  2. ஜயகங்கை  3. அங்கமிடில்ல  4. மினனிப்பே

**09.** பிக்குகளின் நீர்த்தேவைக்காக, அழகுக்காக, சூழலை குளிர்ச்சியாக வைத்திருக்க போன்ற தேவைக்காக உருவாக்கப்பட்ட தடாகமாக கருதப்படுவது.
1. தாமரை பொய்கை  2. யானைப் பொய்கை  3. குட்டம் பொய்கை  4. ரன்மசு பொய்கை

**10.** இலங்கையில் முதன் முதலில் நந்தவனம் உருவாக்கிய மன்னனாக கருதப்படும் ஆட்சியாளன்.
1. தேவநம்பியதிஸ்ஸன் 2. மகாபராக்கிரமபாகு 3. மூத்தசிவன் 4. வசபன்

**11.** புராதன இலங்கையில் முதன்மை பெற்ற உலோக கைத்தொழிலாகக் கருதப்படுவது.
1. செம்பு 2. இரும்பு 3. தங்கம் 4. வெள்ளி

**12.** அனுராதபுர காலத்தில் தலைநகருக்கு வெளியே அமைக்கப்பட்ட பாரிய தாதுகோபமாகக் கருதப்படுவது.
1. மிரிசிவெட்டிய 2. ருவான்வெலிசாய 3. சோமாவதி 4. அபயகிரி

**13.** இராசரட்டைக் காலத்துக்குரிய மிகச் சிறந்த "வாஹல்கட" (நுழைவாயில்) கொண்ட தாதுகோபம்.
1. ருவான்வெலிசாய 2. அபயகிரி 3. ஜேதவனராமய 4. கண்டகசைத்திய

**14.** பௌத்த குருமார் தங்குவதற்கென உருவாக்கப்பட்ட விசேட கட்டடம்.
1. தூபிகள் 2. போதிமனைகள் 3. ஆராமைகள் 4. சிலைமனைகள்

**15.** சமயம் சார்பற்ற கட்டடமாக கருதக்கூடியது.
1. தானசாலைகள் 2 தியானமண்டபங்கள் 3. அரண்மனைகள் 4. விஹாரைகள்

**16.** அனுராதபுர காலத்திற்குரிய உயர்தரத்திலான போதிசத்துவர் சிலையாகக் கருதக்கூடியது.
1. குஷ்டராஜகல 2. வெலிகம 3. தம்பேகொட 4. யடால வெஹர

**17.** பெலநறுவைகால சந்திரவட்டக் கல்லில் எருதின் உருவம் நீக்கப்பட்டமைக்கு செல்வாக்குச் செலுத்திய மதம்.
1. இந்து 2. பௌத்தம் 3. இஸ்லாம் 4. கிறிஸ்தவம்

**18.** குதிரைத்தலையும் மனித உருவமும் கொண்ட செதுக்கல் காணப்படும் விஹாரை.
1. இசுறுமுனிய 2. மிரிசிவெட்டிய 3. அபயகிரி 4. ஜேதவனராமய

**19.** சீகிரிய சுவரோவியத்தில் காணப்படும் பெண்கள் சூடியுள்ள மலர்கள் அல்லாதது.
1. செண்பகம் 2. தாமரை 3. ரோஜா 4. அல்லி

**20.** பொலநறுவைகால சித்திரங்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது.
1. சீகிரியா 2. திவங்கசிலைமனை 3. தலதாமாளிகை 4. தம்புள்ள ஓவியம்

**(20x2=40 புள்ளிகள்)**

## பகுதி II

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**01.** 1. அருகில் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினை அவதானித்து கீழே தரப்பட்ட வரலாற்று இடங்களுக்கு பொருத்தமான எழுத்தினை தெரிவு செய்து **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.

**1)** மல்வத்து ஓயா (.........)

**2)** கலா வாவி (.........)

**3)** அனுராதபுரம் (.........)



4) பராக்கிரம சமுத்திரம் (.........)

5) மகாகம (.........)

6) பொலநறுவை (.........) **(6x1=6 புள்ளிகள்)**

2. அருகில் தரப்பட்டுள்ள படத்தினை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.




1) காட்டப்பட்டுள்ள கட்டடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2) காணப்படும் வரலாற்று நகரத்தினைக் குறிப்பிடுக.
3) கட்டடத்துடன் தொடர்புபடும் மதத்தினைக் குறிப்பிடுக.
4) காணப்படும் கலை மரபினைக் குறிப்பிடுக.
5) அமைத்த தென்னிந்திய அரசினைக் குறிப்பிடுக.
6) அமைக்கப் பயன்படுத்திய கல்லினைக் குறிப்பிடுக.

**(6x1=6 புள்ளிகள்)**

**02.** 1. கீழே தரப்பட்டுள்ள குளங்களை உருவாக்கிய மன்னர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.

1) மணிஹிர வாவி :.........................
2) மாகாநிக்கவட்டி குளம் :.........................
3) மகாதத்த வாவி :.........................

**(மகாபராக்கிரமபாகு, வசபன், தேவநம்பியதிஸ்ஸன், மகாசேனன், சத்தாதிஸ்ஸன், தாதுசேனன்)**

2. பாரிய குளங்களை உருவாக்கியதால் இலங்கையர்கள் அடைந்த அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

3. பாரிய குளமொன்றில் பின்வரும் தொழில்நுட்பத்துடன் தொடர்புபடும் அமைப்பினை **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.

1) அதிக அமுக்கத்துடன் குளத்தில் இருக்கும் நீரை பாதுகாப்பாக சேமித்து வைத்திருக்க உருவாக்கப்பட்ட அமைப்பு.
2) அதிக அமுக்கத்துடன் குளத்தில் இருக்கும் நீரை கால்வாய்க்கு விடுவிக்க உருவாக்கப்பட்ட அமைப்பு.
3) குளத்தில் ஏற்படும் நீர் அலைகளால் குளக்கட்டு அரிக்கப்படுவதைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட அமைப்பு.
4) அதிக அமுக்கத்துடன் குளத்தில் இருக்கும் நீரின் அமுக்கத்தைச் சமநிலைப்படுத்தி, நீரின் வேகத்தைக் கட்டுப்படுத்தி கால்வாய்க்கு நீரை விடுவிக்க பயன்படுத்தப்பட்ட அமைப்பு.
5) குளத்தில் சேரும் மேலதிக நீரை பாதுகாப்பாக வெளியேற்ற அமைக்கப்பட்ட அமைப்பு.

**(3+4+5=12 புள்ளிகள்)**

**03.** 1. கீழே தரப்பட்டுள்ள கால்வாய்களை உருவாக்கிய மன்னர்களை அடைப்புக்குறிக்குள்லிருந்து தெரிவு செய்து **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.

**1)** ஆலிசார கால்வாய் :……………………..

**2)** தல்வத்து கால்வாய் :……………………..

**3)** யோத எல கால்வாய் :……………………..

**(மகாபராக்கிரமபாகு, வசபன், முதலாம் அக்கபோதி, மகாசேனன், தாதுசேனன்)**

2. புராதன கால இலங்கையில் பொய்கைகள் அமைக்கப்பட்டதன் தேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

3. புராதன கால இலங்கையில் கால்வாய்கள் அமைக்கும் போது எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொள்ள பயன்படுத்திய தொழில்நுட்பங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

**(3+4+5=12 புள்ளிகள்)**

**04.** 1. கீழே தரப்பட்டுள்ள உலோகக் கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கு கல்வெட்டுக்களில் குறிபபிடப்பட்டுள்ள சொற்பிரயோகத்தினை அடைப்புக்குறிக்குள்லிருந்து தெரிவு செய்து **வினா இலக்கங்களின் ஒழுங்கில்** விடை எழுதுக.

**1)** இரும்பு :……………………..

**2)** செம்பு :……………………..

**3)** வெள்ளி :……………………..

**(மணிகார, கபர, தம்பர, கும்பலு, தோபஷ, ததவய)**

2. **1)** அனுராதபுர காலத்தில் அதிகளவிலான செங்கற்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தாதுகோபங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2)** புராதன இலங்கையில் இரும்பு உருக்கப்பட்டவிதம் தொடர்பான தெளிவான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற பிரதேசங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

3. கீழே தரப்பட்டுள்ள உற்பத்திகளை மேற்கொள்ள புராதன கால இலங்கையில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் பற்றி **சுருக்கமாக** குறிப்பிடுக

**1)** மட்பாண்ட உற்பத்தி

**2)** இரும்பு உருக்கும் உற்பததி **(3+4+5=12 புள்ளிகள்)**

**05.** 1. இராசரட்டை நாகரிக காலத்தில் சிலைமனைகளை நிர்மாணிக்கும் போது பின்பற்றப்பட்ட கலை மரபுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

2. அனுராதபுர கால சந்திரவட்டக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள மிருகங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

3. **1)** புராதன இலங்கையின் வைத்திய சிதைவுகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

**2)** இலங்கையின் ஆரம்பகால சித்திரக் கலை பற்றி அறிய உதவும் கற்குகைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**(3+4+5=12 புள்ளிகள்)**